

நெற்கட்டும் செவலை தலைமையிடமாக கொண்டு ஆண்டுவந்த பாளையக்காரரான பூலித்தேவன் படையில் படைத்தளபதியாக இருந்த ஒண்டிவீரன் நினைவுநாளை முன்னிட்டு தூத்துக்குடி வடக்கு மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் திருமதி.பி.கீதாஜீவன் தலைமையில் மாவட்ட கழக அலுவலகத்தில் ஒண்டிவீரன் படத்துக்கு மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. நிகழ்வில் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர்.ஆனந்தசேகரன், மாவட்ட துணை செயலாளர் ராஜ்மோகன் செல்வின், மாவட்ட அவைத்தலைவர் செல்வராஜ், ஆதிதிராவிடர் நல அணி நிர்வாகிகள் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### “நந்தன் கால்வாய் திட்டம்” — கடந்த

# கழக அரசில்தான் அரசாணை வெளியிட்டு - நிதி ஒதுக்கினோம்!

## சட்டப் பேரவையில் — கழகக் கொறடா எ.வ.வேலு ஆதாரங்களுடன் விளக்கம்!

சென்னை, ஆக. 21-

சட்டப் பேரவை விவாதத்தின் போது குறுக்கிட்டுப் பேசிய கழகக் கொறடா எ.வ.வேலு அவர்கள், “நந்தன் கால்வாய் திட்டத்திற்கு, கடந்த கழக அரசில்தான் அரசாணை வெளியிடப்பட்டு, நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டது” என, ஆதாரங்களுடன் விரிவான விளக்கமளித்தார்.



சட்டப் பேரவையில் அவர் பேசியதாவது:-

நந்தன் கால்வாய் திட்டத்திற்காக முதல்முதலாக முயற்சி எடுத்தவர் அண்ணன் ஏ. கோவிந்தசாமிதான். அதுதான் உண்மையும்கூட.

அவர் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில், அண்ணன் கலைஞர் அவர்களுடன் அப்போதைய அமைச்சரவையில் வேளாண் துறை அமைச்சராக இருந்தார். நீண்ட நெடிய காலமாக அது வேண்டுமென்று கேட்டகப்பட்டதுண்டு. சொன்னதைப்போல, தூர்வாருவதற்காகக்கூட ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள்; அதை நான் இல்லை என்று சொல்லவில்லை. ஆனால், அந்தத் திட்டத்தினுடைய நோக்கம் என்னவென்றால் சாத்தனூரினுடைய உபரி நீர், திருவண்ணாமலை மாவட்டத்தில் ஏறத்தாழ 11 ஏரிகளை நிரப்பி விவசாயத்திற்குப் பயன்படுத்துவது; அதற்குப்பிறகு விழுப்புரம் மாவட்டத்திற்கு நேரடியாக வருவதுதான் அந்தத் திட்டத்தினுடைய நோக்கம். ஆனால், அதனைச் செய்யவில்லை. கடைசி நேரத்தில், அதாவது குறிப்பாக ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் முதலமைச்சர் பலமுறை சொல்லி, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா அவர்களை, நானே அழைத்துப் பேசினேன். ஏற்கெனவே, விக்கிரவாண்டி இடைத்தேர்தல் நடைபெற்றபோது நாம் ஒரு வாக்குறுதியை கொடுத்திருக்கி றோம். அதனால் அதை கட்டாயம் செய்ய வேண்டும் என்று சொல்லி, அதற்காக நில எடுப்பு செய்ய வேண்டுமென்று, கால்வாய் வெட்ட வேண்டும் என்றால் நில எடுப்பு செய்ய வேண்டும் அல்லவா! அரசாங்கத்தில் record இருக்கிறது அல்லவா! அதனால் நிலம் எடுப்பதற்காக எங்களுடைய ஆட்சியில் G.O. வெளியிடப்பட்டு நிதி ஒதுக்கினோம். அதைத்தான் உறுப்பினர் எம். ஆர்.கே. பன்னீர்செல்வம் குறிப்பிட்டார்கள்.

இவ்வாறு அவர் பேசினார்.

### அரசுப் போக்குவரத்துக் கழகப் பணியிடங்களில் — உ.பி. மாநில தனியார் ஏஜன்சியுடன் உடன்பாடு செய்த

# த.வெ.க. அரசினால் - பல்லாயிரக்கணக்கான தமிழக இளைஞர்களின் வாய்ப்பு பறிபோகும் விபரீதம்!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கம் அம்பலம்!

சென்னை, ஆக. 21-

அரசுப் போக்குவரத்துக் கழகப் பணியிடங்களில் உத்தரப்பிரதேச மாநில தனியார் ஏஜன்சியுடன் உடன்பாடு செய்த த.வெ.க.அரசினால் பல்லாயிரக்கணக்கான தமிழக இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு பறிபோகும் விபரீதம் ஏற்பட்டுள்ளது என தினகரன் நாளேடு தலையங்கத்தில் அம்பலப்படுத்தியுள்ளது.



தினகரன்

ஆகஸ்ட் 20, 2026 வியாழக்கிழமை

தமிழர்கள் இல்லையா சார்..?

சென்னை மாநகர பேருந்துகளில் 1,797 நடத்துநர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமிக்க, உத்தரப்பிரதேச மாநிலத்தை சேர்ந்த தனியார் ஏஜென்சியுடன் தவெக அரசு ஒப்பந்தம் செய்துள்ளது. இதற்கு போக்குவரத்து தொழிற் சங்கங்களும், ஊழியர்களும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இந்த விபரீத முடிவால், குறிப்பிட்ட அந்த உ.பி நிறுவனம் வடஇந்தியர்களை பணிக்கு எடுக்கும் அபாயம் உருவாகியுள்ளது. சென்னையில் உள்ள முக்கிய 4 மண்டல பணிமனைகளுக்கு தேவையான மனிதவளம் மற்றும் அடிப்படை ஊதிய கட்டமைப்பு வரையறுக்கப்பட்டுள்ளது. அடையாறு மண்டலத்தில், தினசரி 350 பணியாளர்கள் தேவைப்படுகின்றனர். ஒரு நபருக்கான அடிப்படை

இதுகுறித்து 20.8.2026 வெளியிட்டுள்ள தினகரன் தலையங்கம் வருமாறு:-

சென்னை மாநகரப் பேருந்துகளில் 1,797 நடத்துநர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமிக்க, உத்தரப்பிரதேச மாநிலத்தை சேர்ந்த தனியார் ஏஜென்சியுடன் தவெக அரசு ஒப்பந்தம் செய்துள்ளது. இதற்கு போக்குவரத்து தொழிற் சங்கங்களும், ஊழியர்களும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இந்த விபரீத முடிவால், குறிப்பிட்ட அந்த உ.பி நிறுவனம் வடஇந்தியர்களை பணிக்கு எடுக்கும் அபாயம் உருவாகியுள்ளது. சென்னையில் உள்ள முக்கிய 4 மண்டல பணிமனைகளுக்கு தேவையான மனிதவளம் மற்றும் அடிப்படை ஊதிய கட்டமைப்பு வரையறுக்கப்பட்டுள்ளது. அடையாறு மண்டலத்தில், தினசரி 350 பணியாளர்கள் தேவைப்படுகின்றனர்.

ஒரு நபருக்கான அடிப்படை வீதம் ரூ.27,679 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது (கூடுதலாக 18% ஜி.எஸ்.டி). குரோம்பேட்டை மண்டலத்தில் தினசரி 320 பணியாளர்கள் தேவை. அடிப்படை வீதம் ரூ.27,679 மற்றும் 18% ஜி.எஸ்.டி. வடபழனி மண்டலத்தில் தினசரி 295 பணியாளர்கள் தேவை. அடிப்படை வீதம் ரூ.27,679 மற்றும் 18% ஜி.எஸ்.டி. அயனாவரம் மண்டலத்தில் தினசரி 256 பணியாளர்கள் தேவை. அடிப்படை வீதம் ரூ.27,679 மற்றும் 18% ஜி.எஸ்.டி. இதன்மூலம் ஒரு பணியாளருக்கு நிர்ணயிக்கப்பட்ட அடிப்படை தொகைக்கு மேல் 18 சதவீத ஜி.எஸ்.டி இணைக்கப்பட்டு, அந்நிறுவனத்திற்கு தொகை வழங்கப்படும்.

தவெக அரசின் இந்த நடவடிக்கைக்கு அரசு போக்குவரத்து கழக தொழிலாளர் சங்கங்கள் கடுமையான எதிர்ப்பை பதிவு செய்துள்ளன. பல ஆண்டுகளாக அரசு போக்குவரத்து கழகங்களில் பல்லாயிரக்கணக்கான பணியிடங்கள் காலியாக உள்ள நிலையில், இலட்சக்கணக்கான தமிழக இளைஞர்கள் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துவிட்டு பணிக்காக காத்திருக்கின்றனர்

இத்தகைய சூழலில், அரசு நிரந்தர பணியிடங்களை உருவாக்காமல், தனியார் மயமாக்கல் மற்றும் ஒப்பந்த முறைக்கு வழிவகுப்பது பொதுத்துறை நிறுவனங்களின் பாதுகாப்பை கேள்விக்குறியாக்கும் என தொழிற்சங்கங்கள் சுட்டிக்காட்டுகின்றன. குறிப்பாக, உத்தரப்பிரதேசத்தை சேர்ந்த நிறுவனத்திற்கு டெண்டர் ஒதுக்கப்பட்டிருப்பதன் மூலம், உள்ளூர் இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு பறிக்கப்பட்டு, வடமாநில தொழிலாளர்கள் அதிகளவில் பணியமர்த்தப்பட வாய்ப்பு உள்ளது.

ஏற்கனவே, சாலையோர டீக்கடை முதல் ஸ்டார் ஓட்டல் வரை வடமாநில தொழிலாளர்கள் ஆக்கிரமிப்பு நிரம்பி இருக்கிறது. இது, போதாது என்று, அரசே போக்குவரத்து துறையில் வடமாநில தொழிலாளர்களை பணியமர்த்துவது வெந்தபுண்ணில் வேல் பாய்ச்சுவது போல் உள்ளது. மாநகர பேருந்துகளில் தினசரி இலட்சக்கணக்கான பொது மக்கள், மாணவர்கள், பெண்கள் மற்றும் முதியவர்கள் பயணிக்கின்றனர்.

உள்ளூர் நிலவியல், பேருந்து நிறுத்தங்களின் பெயர்கள் மற்றும் தமிழ் மொழி பயன்பாடு மிக அவசியமான ஒன்றாக இருக்கும் நடத்துநர் பணிக்கு, வெளிமாநில நிறுவனங்களின் வழியே ஊழியர்கள் நியமிக்கப்பட்டால் பயணிகளுடன் தகவல் தொடர்பில் சிக்கல்கள் எழும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

இந்த ஒப்பந்த உத்தரவை உடனடியாக திரும்ப பெற வேண்டும், வெளிமுகமை முறையை கைவிட்டு தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் அல்லது வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் வெளிப்படையாக நிரந்தர நடத்துநர்களை தேர்வுசெய்ய வேண்டும் என்பதுதான் தமிழ் மக்களின் ஒற்றை கோரிக்கை. இந்த விவகாரம், அடுத்தக்கட்டமாக பெரும் அரசியல் விவாதமாக உருவெடுக்கும் முன்பு, தவெக அரசு விழித்துக்கொள்வது நல்லது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.



தேனி தெற்கு மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் எஸ் எஸ் புரம் அய்யணன் இல்ல விழாவில் ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் கலந்து கொண்டார். உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஆசையன், ஒன்றிய செயலாளர் ராஜாராம், பேரூர் செயலாளர் சரவணன், விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் சேது ராஜா, தொழிலதிபர் தவம், வழக்கறிஞர் நிஷாந்த், இளைஞர் அணி நிர்வாகிகள், மாணவர் அணி நிர்வாகிகள் மற்றும் ஒன்றிய செயலாளர்கள், நகரச் செயலாளர்கள், பேரூர் செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக மூத்த முன்னோடிகள் பலர் கலந்து கொண்டனர்.

### பா.ஜ.க ஒன்றிய அரசு உருவாக்கிய

# புதிய சட்டமான VB-G-RAM G குழப்பங்களின் கோபுரம்!

மகாத்மா காந்தி தேசிய கிராமப்புற வேலைவாய்ப்பு உத்தரவாத சட்டத்திற்கு (Mahatma Gandhi National Rural Employment Guarantee Act MGNREGA) மாற்றாக 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் அவசரஅவசரமாக “VBGRAM G” என்ற சட்டம் நிறைவேற்றப்பட்டு குடியரசுத் தலைவரின் ஒப்புதலோடு சட்டவடிவம் பெற்றது. ஆனால், அதற்கான துணை விதிகள் 2026 மே மாதம் தொடர்புடைய அமைச்சரவையால் வெளியிடப்பட்டு, ஜுன் மாதம் நடைமுறைக்கு வந்திருக்கிறது. சட்டம் நிறைவேற்றப்பட்ட 2025 டிசம்பர் மாதத்திலிருந்து, விதிகள் நடைமுறைக்கு வந்த 2026 மே மாதம்முடிய இடைப்பட்ட காலத்தில் எந்த விதமான இயக்கமோ முன்னேற்றமோ இந்தச் சட்டத்தின் அடிப்படையில் உருவாகவில்லை.

இந்தச் சட்டத்தின் மூலம் ஒன்றிய அரசும், தொடர்புடைய மாநில அரசுகளும் முறையே 60:40 என்ற விகிதத்தில் செலவினங்களை ஏற்றுக்கொள்ளும் என வரையறுக்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய சட்டத்தின் நோக்கம் என்பது கிராமப்புறத்திலுள்ள மக்களுக்கு பயனுள்ள வேலை வாய்ப்புகளை உருவாக்கித் தருவதும், கிராமப்புற வளர்ச்சிக்கான திட்டப் பணிகளை மேற்கொள்வதுமாகும்.

ஆனால், சட்டமும் விதிகளும் நடைமுறைக்கு வந்தப்பின்னர் இந்தியாவிலுள்ள எந்த மாநிலத்திலும் கணிசமான வேலை வாய்ப்புகள் உருவாக்கப் படவில்லை. மாறாக, ஏற்கனவே மகாத்மா காந்தி தேசிய கிராமப்புற வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தின்கீழ் உருவாக்கிய வேலை வாய்ப்பு சதவிகிதத்தில் கணிசமாக பாரதீய ஜனதா கட்சியால் உருவாக்கப்பட்ட இந்தச் சட்டத்தின் நடைமுறைக்குப் பின்னர் மக்கள் ஆச்சரியப்படத்தக்க வகையில் குறைந்திருக்கிறது என்பதை “இந்து” ஆங்கில நாளேட்டில் (18.08.26) இத்துறை சார்ந்த அறிஞர்களான Jean Dreze, Mohammed Zameer தெளிவான விளக்கங்களை கட்டுரையில் புள்ளி விவரங்களோடு தெரிவித்திருக்கிறார்கள்.



**பொன்.முத்துராமலிங்கம்**
முன்னாள் அமைச்சர்
கழக உயர்நிலை
செயல் திட்டக்குழு உறுப்பினர்

ஒன்றிய அரசினுடைய இந்தப் புதிய சட்டத்தால் எந்த பயனும் எந்த மாநிலத்திலும் குறிப்பிடத்தக்க அளவிற்கு கிராமப்புற மக்களுக்கு பயனளிக்கவில்லை என்பதை மிகத் தெளிவாக விளக்கியிருக்கிறார்கள்.

இதுமட்டுமல்ல, இந்த புதிய சட்டத்தினை செயல்படுத்துவதில் எத்தகைய விடைகாணவியலாத குழப்பங்களும், மாற்றுவழி காணவியலாத குழப்பங்களும், குதர்க்கங்களும் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன என்பதை கட்டுரையாளர்கள் மிகத் தெளிவாக சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

(The transition the ground reality During the first three months of this financial year (April to June), confusion prevailed. To paraphrase Gramsci, the old world of MGNREGA was dying, and the new world of VB-G-RAM G was struggling to be born. In some districts, MGNREGA functionaries refused to open new works. In many areas, there was no MGNREGA work at all. This was a serious lapse, as MGNREGA is normally at a peak during these summer months (a slack agricultural season in large parts of India). The Limbo continued in July 2026, when VB-G-RAM G made a faltering start.

இந்தப் புதிய சட்டத்தை அறிமுகப்படுத்திய கிராமப்புற வளர்ச்சி துறையின் அமைச்சர் புதிய சட்டம் 2026 ஏப்ரல் 1 முதல் செயல்படுத்தப்படும் என்று அறிவித்தார்கள். ஆனால், ஏப்ரல் மாதம் வரையிலும் புதிய சட்டம் அமல்படுத்தப்படாமையால், முந்தைய மகாத்மா காந்தி தேசிய வேலைவாய்ப்பு உறுதி திட்ட சட்டம் தொடர்ந்தது. இந்த நிலையில் 2026 மே மாதம் 22ஆம் தேதி புதிய சட்டத்திற்கான (VBGRAMG) விதிகள் (Rules) பொதுமக்களின் கருத்துக்காக முன்வைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து ஜுன் மாதம் 30ஆம் தேதியில் புதிய சட்டத்திற்கான விதிகள் அறிமுகப்படுத்தப்பட்டது. புதிய விதிகள் காலதாமதமாக அறிமுகப்படுத்தப்பட்ட நிலையில்கூட எந்த முன்னேற்றமும் புதிய சட்டத்தின் அடிப்படையில் ஏற்படவில்லை என்பதை கட்டுரையாளர்கள் தெளிவுபட உணர்த்தியுள்ளார்கள்.

மேலும், இந்த புதிய சட்டத்தின் அடிப்படையில் எந்த மாற்றமும் கள எதார்த்த நிலைமையில் உருவாகவில்லை. இந்த உண்மைகளை விளக்குவதற்காக கட்டுரையாளர்கள் இந்தப் புதிய சட்டத்தின் அமலாக்கத்திற்கு பின்னால் எந்த அளவிற்கு ஒவ்வொரு மாநிலத்திலும் வேலை வாய்ப்புகள் ஆச்சரியப் படத்தக்க வகையில் குறைந்திருக்கிறது என்பதை விரிவான அட்டவணை யின் மூலம் விளக்கியிருக்கிறார்கள். ஒன்றிய அரசு கொண்டு வந்த சட்டம் (VBGRAMG) என்பது முந்தைய சமூக நீதிக் கோட்பாட்டின் அடிப்படையில் உருவாக்கப் பட்ட மகாத்மா காந்தி தேசிய கிராமப்புற வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தை உருக்குலைப்பதற்கும் செயலற்று போவதற்கும்தான் பயன்பட்டி ருக்கிறது என்பதை “இந்து” ஆங்கில நாளிதழில், வேலைவாய்ப்பு உறுதி திட்டம்திக்கற்றநிலையில்காட்சிபொருளாகியிருக்கிறது.

இந்த தலைப்பின்கீழ் (Employment Guarantee has slippedintoLimbo)எழுதப்பட்டகட்டுரையைப்படித்தால் மிகத் தெளிவாகவே விளங்கும். ஒன்றிய பா.ஜ.க அரசின் பயனற்ற ஆம்! செயல்படுத்த முடியாத ஒரு புதிய சட்டத்தின் மூலம் கிராமப்புற மக்களுக்கு குறைந்தபட்ச வேலை வாய்ப்பை உறுதிசெய்யும் MGNREGA சட்டத்தை சீர்குலைத்திருக்கிறார்கள் என்பதோடு கிராமப்புற மக்களின் வாழ்க்கையில் கடுமையானபாதிப்பையும்உருவாக்கியிருக்கிறார்கள். இந்த ஜீவாதாரப் பிரச்சனைக்கு பாசிச ஒன்றிய பா.ஜ.க அரசின் பதில் என்ன? எங்கள் ஆட்சி சர்வரோக சஞ்சீவியாக பயன்பட்டுக்கொண்டிருக்கிறது என்று தண்டோரா போட்டுக்கொண்டிருக்கும் தமிழக வெற்றிக் கழக ஆட்சியின் பதில் என்ன? இதுவே பாதிக்கப்பட்ட கிராமப்புற மக்களின் எதிர்பார்ப்பு!

### மைனாரிட்டி தவெக ஆட்சியில் நுகர்பொருள் வாணிபக் கழகக் கிட்டங்கிகளில்

# 3வது நாளாக சுமை தூக்கும் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம்!

## பொது விநியோகப் பொருட்கள் விநியோகம் பாதிக்கும் அபாயம்!




தேனி, ஆக. 21

தேனி மாவட்டம் ஆண்டிபட்டி அருகே வைகை அணை சாலையில் அமைந்துள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிட்டங்கி உள்ளிட்ட மாவட்டம் முழுவதிலும் உள்ள கிட்டங்கிகளில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக சுமை தூக்குவோர் மாநில பாதுகாப்பு சங்கம்’ சார்பில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி நேற்று 3 வது நாளாக தொழிலாளர்கள் காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சங்க அங்கீகாரம், கூலி உயர்வு உள்ளிட்ட பல் வேறு நியாயமான கோரிக்கைகளை முன் வைத்து இது தொடர்பாக சென்னை உயர் நீதி மன்றம் உத்தரவிட்டும், இதுவரை சங்க அங்கீகாரத்திற்கான தேர்தல் நடத்தப்படவில்லை என தொழிலாளர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இதில் நீதிமன்ற உத்தரவுப்படி சங்க அங்கீகார தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும்.

தற்காலிகப் பணியாளர்களின் பெயர்களை வருகைப் பதிவேட்டில் சேர்க்க வேண்டும்.

சிகப்பு அட்டை வைத்துள்ள தொழிலாளர்களுக்கு, முன் தேதியிட்ட கூலி உயர்வுடன் கூடிய பச்சை அட்டை வழங்க வேண்டும்.

இக்கோரிக்கைகளை வலியுறுத்தி மாவட்டச் செயலாளர் முருகன் தலைமையில் மாவட்டம் முழுவதும் போராட்டம் தீவிரமடைந்துள்ளது. தேனி, ஆண்டிபட்டி, உத்தமபாளையம், சில்லமரத்து பட்டி, போடி மற்றும் பெரியகுளம் ஆகிய 6 இடங்களில் இயங்கி வரும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிட்டங்கிகளிலும் பணிகள் முற்றிலும் முடங்கியுள்ளன.

இந்த வேலைநிறுத்தப் போராட்டத்தின் காரணமாக ரேஷன் கடைகள், அங்கன்வாடி மையங்கள், அரசு மருத்துவமனைகள், காலை உணவுத் திட்டம், அம்மா உணவகங்கள், சிறைச்சாலைகள் மற்றும் தீயணைப்பு நிலையங்களுக்கு செல்ல வேண்டிய அத்தியாவசியப் பொது விநியோகப் பொருட்கள் தங்கு தடையின்றி செல்வதில் பெருமளவில் பாதிப்பு ஏற்படும் சூழல் உருவாகியுள்ளது.

எனவே, மைனாரிட்டித வெகஅரசு உடனடியாக தலையிட்டு தொழிலாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் எனப் பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.